**இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்**

**பாடத்திட்டம் 2020**

# முன்னோடி வினாத்தாள்

# மட்டம் III

## 304 - கூட்டுநிறுவன மற்றும் தனிநபர் வரியியல் (CPT)

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு

## இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## 304 – கூட்டுநிறுவன மற்றும் தனிநபர் வரியியல் (CPT)
## முன்னோடி வினாத்தாள்

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (கவனமாக வாசிக்கவும்)**

**அனுமதிக்கப்பட்ட காலம்:**

வாசிப்பதற்கு : 15 நிமிடங்கள்
விடையெழுத : 03 மணித்தியாலங்கள்

**வினாத்தாளின் கட்டமைப்பு:**

- இந்த வினாத்தாள் பகுதி A, பகுதி B மற்றும் பகுதி C எனும் மூன்று பகுதிகளைக் கொண்டது.
- பகுதி A, பகுதி B மற்றும் பகுதி C ஆகிய பகுதிகளிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**புள்ளிகள்:**

- ஒவ்வொரு பகுதிக்குமான புள்ளிகளின் ஒதுக்கீடு:

| **பகுதி** | **புள்ளிகள்** |
|---|---|
| பகுதி A | 20 |
| பகுதி B | 30 |
| பகுதி C | 50 |
| **மொத்தம்** | **100** |

- ஒவ்வொரு வினாவுக்குமான புள்ளிகள் வினாவுடன் காட்டப்பட்டுள்ளன.
- இவ்வினாத்தாளின் சித்திப்புள்ளி 50 % ஆகும்.

**விடைகள்:**

- சகல விடைகளும் உமக்குத் தரப்படும் விடைப் புத்தகத்தில் எழுதப்பட வேண்டும். வினாத்தாளில் எழுதப்படும் விடைகள் புள்ளியிடலுக்காகக் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.
- ஒவ்வொரு வினாவுக்குமான விடையினை ஒரு புதிய பக்கத்தில் எழுத ஆரம்பிக்கவும்.
- எல்லாச் செய்முறைகளும் தெளிவாகக் காட்டப்பட வேண்டும்.
- தாளின் ஓரங்களுள் எழுதலாகாது.

**விடைப் புத்தகங்கள்:**

- ஒவ்வொரு விடைப் புத்தகத்தின் முகப்பு அட்டையிலும் அறிவுறுத்தல்கள் தரப்பட்டுள்ளன.

**கணிப்பான்கள்:**

- பரீட்சார்த்திகள் குறியீட்டு அட்சர கணிதம் மற்றும் வகையீட்டு வசதிகள் அற்ற எந்தவொரு கணிப்பானையும் பயன்படுத்தலாம். திட்டமிடக்கூடிய கணிப்பான்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.

**இணைப்பு:**

- செயல் வினைச்சொல் செவ்வைநிரல் – ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் கொண்டுள்ளது (நோக்கச் சோதனை வினாக்கள் தவிர). பரீட்சார்த்திகள் வினைச்சொல் செவ்வைநிரலில் தரப்பட்டுள்ள பொருள் வரையறைகளின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

**நான்கு (04) கட்டாய வினாக்கள்**
(மொத்தம் 20 புள்ளிகள்)

**பகுதி A**

## *வினா 01*

**குளோபல் டெக் இன்கோப்பரேஷன்** என்பது ஐக்கிய அமெரிக்காவில் உள்ள கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனியாகும். **வரையறுக்கப்பட்ட குளோபல் டெக் ஸ்ரீ லங்கா (தனியார்) கம்பனி** என்பது இலங்கை கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு துணைக் கம்பனியாகும். **வரையறுக்கப்பட்ட குளோபல் டெக் ஸ்ரீ லங்கா (தனியார்) கம்பனியின்** பெரும்பாலான பணிப்பாளர் சபையினர் அதன் தாய்க் கம்பனியினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

இலங்கையில் வரி நோக்கங்களுக்காக **வரையறுக்கப்பட்ட குளோபல் டெக் ஸ்ரீ லங்கா (தனியார்) கம்பனியின்** வதிவிட அந்தஸ்தை (residency status) **விபரிக்குக.**

***[05 புள்ளிகள்]***

## *வினா 02*

**றிலேஸ் பிஎல்சி** என்பது இலங்கையிலுள்ள பன்முகப்படுத்தப்பட்ட ஒரு கூட்டு நிறுவனமாகும். இங்கு 56 துணைக் கம்பனிகள் காணப்படுவதுடன் அதில் 5 வெளிநாட்டுத் துணைக் கம்பனிகளாகவும் சில பட்டியலிடப்பட்ட கம்பனிகளாகவும் உள்ளன. குழுமமானது கம்பனிகளுக்கிடையில் பொருட்களைப் பரிமாற்றம் செய்வதற்காக பல்வேறு விலையிடல் முறைகளைப் பயன்படுத்துகிறது. தாய்க் கம்பனியானது பகிரப்பட்ட சேவை நிலையமொன்றின் ஊடாக செயலக சேவை, நிதிச் சேவை போன்ற சில சேவைகளை வழங்குகிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) மற்றொரு நிறுவனத்துடன் இணைந்த நிறுவனமொன்றாக மாறுவதற்கு எந்தவொரு நிறுவனமும் பூர்த்தி செய்ய வேண்டிய நிபந்தனைகள் இரண்டினை (02) **குறிப்பிடுக.**

***[02 புள்ளிகள்]***

(b) வரி நோக்கங்களுக்காக இணைந்த நபர்களுக்கிடையேயான (associated persons) பரிமாற்றங்களுக்காக ஏற்றுக்கொள்ளக்கூடிய விலையிடல் முறைகள் இரண்டினைக் (02) **குறிப்பிடுக.**

***[02 புள்ளிகள்]***

(c) பரிமாற்ற விலையிடல் ஒழுங்குவிதிகளின்படி, கம்பனியினால் தயாரிக்கப்பட்டு பேணப்பட வேண்டிய ஆவணமொன்றைக் **குறிப்பிடுக.** ***[01 புள்ளி]***

***[மொத்தம் 05 புள்ளிகள்]***

## *வினா 03*

போக்குவரத்து வசதிகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள **வரையறுக்கப்பட்டுள்ள ஸ்பீடி கெப்ஸ் (தனியார்) கம்பனியில்** புதிதாக நியமனம் செய்யப்பட்ட கணக்காளர் நீங்களாவீர்கள். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட அண்மைய களக் கணக்காய்வொன்றில் கம்பனியானது நிறுத்திவைத்தல் வரி ஒழுங்குவிதிகளுடன் இணங்கிச் செல்லவில்லை என்பது தெரியவந்தது. பின்வரும் கொடுப்பனவுகள் 2019 செப்ரெம்பர் மாத காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

- அலுவலக வளாகத்திற்கான வாடகைக் கொடுப்பனவு ரூபா 40,000.
- சாதாரண பங்குதாரர்களுக்குச் செலுத்தப்பட்ட இடைக்காலப் பங்கிலாபம் ரூபா 1,200,000.
- கம்பனி வாகனங்களைப் பழுதுபார்த்த பொறியாளருக்குச் (மெக்கானிக்) செலுத்தப்பட்ட தொகை ரூபா 100,000.
- வங்கியொன்றிடமிருந்து பெறப்பட்ட வாகனங்களின் நிதிக் குத்தகையொன்றிற்காகச் செலுத்தப் பட்ட வட்டி ரூபா 53,650.
- தொழில் வழக்கொன்று தொடர்பில் வழங்கப்பட்ட சேவைக்காக வழக்கறிஞர் ஒருவருக்குச் செலுத்தப்பட்ட தொகை ரூபா 30,000.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

மேற்படி கொடுப்பனவுகளிலிருந்து நிறுத்திவைத்தல் வரியைக் கழிப்பதற்கான பொறுப்பினைக் (liability) குறிப்பிடுக. (பொருத்தமானதாயின், நிறுத்திவைத்தல் வரித் தொகையை நீங்கள் கணிப்பிட வேண்டும் அல்லது பொருத்தமற்றதெனின் அதற்கான காரணங்களைக் குறிப்பிட வேண்டும்.) ***[05 புள்ளிகள்]***

## *வினா 04*

பெறுமதிசேர் வரிக்கு (VAT) பதிவுசெய்யப்பட்டுள்ள **வரையறுக்கப்பட்ட ABC கம்பனியின்** வரிக் கணக்காளர் (tax accountant) நீங்களாவீர்கள்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) பொருட்கள் தொடர்பான பெறுமதிசேர் வரிச் சட்டத்தின்படி, வழங்கல் காலம் (time of supply) என்றால் என்ன என்பதை **விபரிக்குக.** ***[03 புள்ளிகள்]***

(b) இலங்கைச் சுற்றுலா பெறுமதிசேர் வரி மீளளிப்புத் திட்டத்தின் (Tourist VAT Refund Scheme - TVRS) கீழ், மீளளிப்பொன்றிற்கு உரித்துடைய இரண்டு (02) நபர்களைக் **குறிப்பிடுக.**

***[02 புள்ளிகள்]***

***[மொத்தம் 5 புள்ளிகள்]***

***பகுதி A இன் முடிவு***

**மூன்று (03) கட்டாய வினாக்கள்**
(மொத்தம் 30 புள்ளிகள்)

**பகுதி B**

## *வினா 05*

**வரையறுக்கப்பட்ட றசறிசி (தனியார்) கம்பனி**யானது 2018 ஏப்ரல் 01 இல் கூட்டிணைக்கப்பட்டதுடன் தனது வியாபாரச் செயற்பாடுகளையும் அதே தினத்தில் ஆரம்பித்தது. கம்பனியானது எந்தவித வரிக் கொடுப்பனவுகளையும் மேற்கொண்டிருக்கவில்லை என்பதுடன் 2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்கான வருமானவரித் திரட்டினையும் இன்னும் வழங்கியிருக்கவில்லை.

இக்கம்பனியின் வரி ஆலோசகராக நீங்கள் நியமிக்கப்பட்டிருக்கிறீர்கள்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

**(a)** 2018/19 ஆம் வரிமதிப்பாண்டின் வருமான வரிக் கொடுப்பனவுகளுக்கான உரிய திகதிகளைக் **குறிப்பிடுக.** ***[03 புள்ளிகள்]***

**(b)** 2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்கான தவணைக் கொடுப்பனவுகளாகச் செலுத்த வேண்டிய வரித் தொகையை எவ்வாறு கணிப்பிடலாம் என்பதை **விபரிக்குக.** ***[04 புள்ளிகள்]***

**(c)** வருமான வரித் தவணைக் கொடுப்பனவுகளைச் செலுத்தாமை தொடர்பில் ஏற்புடையதாக இருக்கக்கூடிய தண்ட ஏற்பாடுகளை (Penal Provisions) **விபரிக்குக.** ***[03 புள்ளிகள்]***

***[மொத்தம் 10 புள்ளிகள்]***

## *வினா 06*

"**சிம்பிள் பிளான்ட்ஸ்**" என்பது **ரூபினி** மற்றும் **பூவினி** ஆகியோர் இலாப நட்டங்களை முறையே 2 : 1 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொண்டு முன்னெடுத்துச் செல்கின்ற ஒரு பங்குடமையாகும். இவர்கள் தாவர நாற்றுக்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளனர்.

2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்குடமையின் வருமானக் கூற்று கீழே தரப்பட்டுள்ளது:

| | **ரூபா** |
|---|---|
| தாவரங்களின் விற்பனை மூலமான மொத்த இலாபம் | 9,760,000 |
| பங்கிலாபம் - WHT இன் நிகர | 64,500 |
| நண்பர் ஒருவருக்கு வழங்கப்பட்ட கடனிலிருந்தான வட்டி | 219,700 |
| | 10,044,200 |
| விநியோகச் செலவினம் | (1,534,000) |
| நிருவாகச் செலவினம் | (5,430,000) |
| நிகர இலாபம் | 3,080,200 |

மேலுள்ள நிகர இலாபத்தைக் கணிக்கும்போது பின்வரும் செலவினங்கள் கழிக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| பங்காளர்களின் சம்பளங்கள் | - | **ரூபினி** ரூபா 600,000 |
| | - | **பூவினி** ரூபா 1,200,000 |
| மூலதன் மீதான வட்டி | - | **ரூபினி** ரூபா 25,000 |
| | - | **பூவினி** ரூபா 86,000 |

ஏனைய சகல செலவினங்களும் வரி நோக்கத்திற்காக அனுமதிக்கத்தக்கவை எனக் கொள்க.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

2018/19 வரிமதிப்பாண்டிற்காகப் பின்வருவனவற்றைக் **கணிக்குக:**

(a) பங்குடமை வருமானம்

(b) பங்குடமை வருமானத்தில் கழிக்கப்பட வேண்டிய நிறுத்திவைத்தல் வரி

***[மொத்தம் 10 புள்ளிகள்]***

## *வினா 07*

**சூதின் (பிரை) லிமிட்டெட்** என்பது பெறுமதிசேர் வரிக்குப் (VAT) பதிவுசெய்யப்பட்டுள்ளதும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைக்குப் பொம்மைகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளதுமான நபர் (கம்பனி) ஒருவர் ஆகும். இதற்கு மேலதிகமாக, அவர்கள் விழிப்புலனற்ற சிறுவர்களுக்காக வெள்ளைப் பிரம்புகளையும் தயாரிக்கின்றனர். 2019 செப்ரெம்பர் 30 ஆந் திகதியுடன் முடிவடைந்த காலாண்டிற்குரிய பின்வரும் தகவல்கள் கம்பனியின் ஏடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டன.

(1) **வழங்கல்களின் விபரம் (VAT நீங்கலாக)**

| | ரூபா |
|---|---|
| பொம்மைகளின் ஏற்றுமதி | 1,860,000 |
| பொம்மைகளின் உள்நாட்டு விற்பனை | 6,510,000 |
| வெள்ளைப் பிரம்புகளின் விற்பனை – உள்நாடு | 930,000 |
| | 9,300,000 |

(2) கம்பனியானது காலாண்டுக் காலப்பகுதியில் பின்வரும் உள்ளீட்டு வரிகளைச் செலுத்தியிருக்கிறது.

| | ரூபா |
|---|---|
| பொம்மைகளுக்கான பொதியிடல் பொருளின் இறக்குமதி மீது | 245,000 |
| உள்நாட்டுக் கொள்வனவுகள் மீது | 184,000 |
| | 429,000 |

(3) உள்ளீட்டு வரி ரூபா 12,000 ஆனது போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட கார்களின் பழுதுபார்ப்புகளின் மீது செலுத்தப்பட்டிருக்கிறது. இது உள்நாட்டுக் கொள்வனவுகள் மீது செலுத்தப்பட்ட பெறுமதிசேர் வரியில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(4) முன்னைய காலாண்டிலிருந்து முன்கொணரப்பட்ட மிகை உள்ளீட்டு VAT தொகை ரூபா 104,000.

(5) காலாண்டிற்கான மாதாந்த VAT தவணைப் கொடுப்பனவாக ரூபா 400,000 இனைக் கம்பனி செலுத்தியிருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2019 செப்ரெம்பர் 30 ஆந் திகதி முடிவடைந்த காலாண்டிற்காகச் செலுத்த வேண்டிய மீதி / (மேலதிகமாகச் செலுத்திய) பெறுமதிசேர் வரியை **மதிப்பிடுக.** ***[மொத்தம் 10 புள்ளிகள்]***

***பகுதி B இன் முடிவு***

**இரண்டு (2) கட்டாய வினாக்கள்** | **பகுதி C**
(மொத்தம் - 50 புள்ளிகள்)

## *வினா 08*

**இ இயுக்கோ (பிரைவேற்) லிமிட்டெட் (EEL)**, என்பது 2017 ஏப்ரலில் இலங்கையில் கூட்டிணைக்கப் பட்ட ஒரு கம்பனியாகும். இது இணையத்தின் ஊடாக கல்விச் சேவைகளை வழங்குகின்ற வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. இது, கம்பனியின் அச்சிடல் தேவைக்காகத் செயற்படுகின்ற ஒரு துணைக் கம்பனியையும் கொண்டிருக்கிறது.

2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **இ இயுக்கோ (பிரைவேற்) லிமிட்டெட்** இன் நிதிக் கூற்றுக்களிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டிருக்கின்றன.

(1) சகல செலவினங்களினதும் தாக்கல்கள் மற்றும் சகல வருமானங்களினதும் வரவிடல்கள் ஆகியவற்றின் பின்னர் 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்கு முன்னரான நிகர இலாபம் ரூபா 36,326,600. கம்பனியின் ஆண்டிற்கான மொத்தப் புரள்வு ரூபா 224,800,000.

(2) ஏனைய வருமானங்களின் கூறுகள்

| | |
|---|---|
| வாடகை வருமானம் | 300,000 |
| நிலையான வைப்பு மீதான வட்டி வருமானம் (நிகர) | 222,300 |
| பெற்ற பங்கிலாபம் - நிகர | 309,600 |
| கணினிகளின் அகற்றல் (விற்பனை) மீதான இலாபம் | 150,000 |
| | 981,900 |

- அதனது கார்த் தரிப்பிடத்தின் ஒரு பகுதி அருகிலுள்ள கம்பனி ஒன்றிற்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. தொடர்புடைய நிறுத்திவைத்தல் வரி (WHT) வாடகை வருமானம் மீது நிலக் குத்தகைதாரரால் கழிக்கப்பட்டு, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.
- மேலுள்ள வட்டி வருமானம் என்பது தொடர்புடைய நிறுத்திவைத்தல் வரி வங்கியால் கழிக்கப்பட்டதன் பின்னர் மாதாந்தம் பெறப்படும் தொகையாகும்.

(3) ஆதனம், பொறி மற்றும் உபகரண விபரங்கள் - கிரயத்தில்

| சொத்து | 2018.04.01 இல் மீதி | சேர்ப்பனவுகள் | அகற்றல்கள் (விற்பனைகள்) | 2019.03.31 இல் மீதி |
|---|---|---|---|---|
| காணி | 12,500,000 | | | 12,500,000 |
| கட்டடம் | 10,000,000 | - | - | 10,000,000 |
| மோட்டார் வாகனங்கள் | 2,750,000 | 2,300,000 | - | 5,050,000 |
| அலுவலக உபகரணம் | 987,000 | 140,000 | - | 1,127,000 |
| கணினிகள் | 2,875,000 | 1,235,000 | 875,000 | 3,235,000 |
| தளபாடம் | 1,243,000 | - | - | 1,243,000 |
| | 30,355,000 | 3,675,000 | 875,000 | 33,155,000 |

- 2017/18 ஆம் வரிமதிப்பாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட கணினிகள் 2019 பெப்ரவரியில் ரூபா 425,000 இற்கு விற்பனை (disposal) செய்யப்பட்டிருந்தன.
- சேர்ப்பனவுகள் உள்ளிட்ட மோட்டார் வாகனங்கள், கல்வி நிலையங்களுக்கு கற்றல் உபகரணங்களைக் கொண்டுசெல்லப் பயன்படுத்திய சிறியரக கெப் (minicabs) வாகனங்களை உள்ளடக்கியிருக்கின்றன.

(4) நிருவாகச் செலவினங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன:

- ஆண்டிற்காகத் தாக்கல் செய்யப்பட்ட தேய்மானத் தொகை ரூபா 3,228,000.
- ஆண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடு ரூபா 886,000.
- கம்பனியானது இலங்கையின் கல்வி முறைமையிலுள்ள பிரச்சினைகள் பற்றிய ஆய்வொன்றிற்காக ரூபா 1 மில்லியனை செலவழித்திருக்கிறது.
- பணிப்பாளர் ஒருவர் கல்விசார் நிபுணர்களின் மாநாடு ஒன்றில் பங்குபற்றுவதற்காக ஐக்கிய இராச்சியத்திற்கு விஜயம் செய்திருந்தார். இந்த விஜயத்திற்கான செலவு ரூபா 650,000.
- கம்பனியானது ரூபா 1,000,000 பெறுமதியான புத்தகங்களை கொழும்புப் பல்கலைக் கழகத்திற்கும் ரூபா 500,000 பெறுமதியான கற்றல் உபகரணங்களை தேவையுடைய மாணவர்களுக்கும் நன்கொடையாக வழங்கியிருந்தது.
- கொழும்பு மாவட்ட நீதிமன்றில் நடைபெறும் தொழில் வழக்கொன்றிற்கான சட்டச் செலவினமாக ரூபா 25,000 செலவு செய்யப்பட்டது.

(5) விநியோகச் செலவினங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன:

- விரிவுரையாளர்கள் மற்றும் பணித்தொகுதியினருக்கு புது வருட அன்பளிப்புகள் வழங்கப் பட்டதற்கான செலவு ரூபா 1,250,000.
- கம்பனியானது மாணவர்களிடமிருந்து வரவேண்டியிருந்த ரூபா 600,000 இனை பதிவழிப்புச் செய்திருந்தது. கம்பனி அவர்களுக்கு எதிராக எவ்வித மீளப்பெறல் நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

(6) நிதிச் செலவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது:

2018 ஏப்ரலில், நிதி நிறுவனம் ஒன்றிடமிருந்து கம்பனி ரூபா 75,000,000 கடனொன்றைப் பெற்றிருக்கிறது. இந்த நிதியானது தொழிற்படு மூலதன நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப் பட்டது. கடன் உடன்படிக்கையின்படி, கம்பனியானது இரண்டு வருட சலுகைக் காலத்தை அனுபவிக்கலாம். கம்பனி ஆண்டின் காலப்பகுதியில் இந்தக் கடன் மீதான வட்டியாக ரூபா 4,500,000 இனைச் செலுத்தியிருக்கிறது.

(7) பின்வரும் ஏனைய தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன:

- 2019 மார்ச் 31 இல், விநியோகிக்கப்பட்ட பங்கு மூலதனம் மற்றும் கம்பனியின் மொத்த ஒதுக்கம் என்பன முறையே ரூபா 13,000,000 மற்றும் ரூபா 2,000,000 ஆகும்.
- 2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்கான பொருளாதார சேவைகள் கட்டண (ESC) கொடுப்பனவு ரூபா 1,124,000 ஆக இருந்தது..

**நீங்கள் செய்யவேண்டியது:**

2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்காக **இ இயுக்கோ (பிரைவேற்) லிமிட்டெட்** இனால் செலுத்தப்பட வேண்டிய / (மேலதிகமாகச் செலுத்தப்பட்ட) வருமான வரியை **மதிப்பிடுக.** ***[25 புள்ளிகள்]***

## *வினா 09*

**திரு. மெண்டிஸ்,** 60 வயது, 2018 சனவரியில் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். அவர் இலங்கையில் புகழ்பெற்ற கம்பனியொன்றில் முகாமையாளர் ஒருவராக 2018 மே 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இணைந்துகொண்டார். அவருக்கு கம்பனிக்கான அவரது முதன்மைத் தொழில் வெளிப்படுத்தல் (primary employment declaration) வழங்கப்பட்டது. 2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்கான (இதன் பின்னனர் ''ஆண்டு' எனக் குறிப்பிடப்படும்) அவரது வருமானம் தொடர்பில் பின்வரும் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

1) ஆண்டிற்குப் பெறப்பட்ட அரசாங்க ஓய்வூதியம் - ரூபா 1,200,000.

2) ஆண்டின்போது அவர் கம்பனியிடமிருந்து பின்வருவனவற்றைப் பெற்றுக்கொண்டார்:

- மொத்தச் சம்பளம் - மாதமொன்றுக்கு ரூபா 180,000.
- பயணப் படி – மாதமொன்றுக்கு ரூபா 40,000.
- 2018 டிசெம்பரில் பெற்ற உபகாரக் கொடுப்பனவு (Bonus) - ரூபா 90,000.
- அவர் தொழில்தருநரால் வழங்கப்பட்ட வாடகையற்ற வீட்டில் வசிக்கிறார். கம்பனி இந்த வீட்டின் உரிமையாளருக்கு மாதாந்தம் ரூபா 30,000 செலுத்துகிறது.
- ஆண்டின் காலப்பகுதியில், கம்பனி ஆண்டிற்கான அவரது தொலைபேசிக் கட்டணத் தொகையான ரூபா 43,000 இனை மீளளிப்புச் செய்திருக்கிறது.

3) **திரு. மெண்டிஸ்** இற்கு குருநாகலில் தென்னந் தோட்டமொன்று சொந்தமாக உள்ளது. மேற்படி வரிமதிப்பாண்டிற்கான இந்தத் தோட்டத்தின் வருமான மற்றும் செலவின விபரங்கள் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| சம்பளங்கள் | 1,675,000 | தேங்காய்கள் விற்பனை | 2,850,000 |
| உரம் | 876,000 | பிற விவசாயப் பொருட்களின் விற்பனை | 253,000 |
| களை பிடுங்கும் இயந்திரங்களுக்கான செலவு | 20,000 | | |
| அங்கீகரிக்கப்பட்ட தரும நிறுவனம் ஒன்றுக்கான நன்கொடை | 100,000 | | |
| மின்சார, நீர்க் கட்டணங்கள் | 64,000 | | |
| ஏனைய செலவினங்கள் | 127,000 | | |
| நிகர இலாபம் | 241,000 | | |
| | 3,103,000 | | 3,103,000 |

4) **திரு. மெண்டிஸ்** இற்கு பாணந்துறையில் வர்த்தகக் கட்டிடமொன்று இருக்கிறது. அது சிலருக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. இதிலிருந்து பெறப்பட்ட மொத்த வாடகை வருமானம் ரூபா 2,000,000. முழுக் கட்டிடத்திற்குமாகச் செலுத்தப்பட்ட சோலைவரி ரூபா 250,000. நிறுத்திவைத்தல் வரி வாடகை வருமானத்திலிருந்து கழிக்கப்பட்டிருக்கிறது. கட்டிட நிருமாணத்திற்காக பெறப்பட்ட கடன் ஒன்றின்மீது வர்த்தக வங்கியொன்றிற்குச் செலுத்தப்பட்ட வட்டி ரூபா 430,000 ஆகும்.

5) அவர் பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளில் முதலீடு செய்திருக்கிறார். ஆண்டின் காலப் பகுதியில் அவர் நிகர பங்கிலாபமாக ரூபா 236,500 இனைப் பெற்றிருக்கிறார்.

6) **திரு. மெண்டிஸ்** ஆண்டின்போது பின்வரும் வட்டி வருமானங்களைப் பெற்றிருக்கிறார்.

- அரச வங்கியொன்றிலுள்ள சேமிப்புக் கணக்கிலிருந்து ரூபா 36,000 - இங்கு WHT கழிக்கப் படவில்லை.
- நண்பர் ஒருவருக்குக் கொடுத்த கடன் ஒன்றிற்காக ரூபா 50,000.

7) **திரு. மெண்டிஸ்** களுத்துறையில் காணி ஒன்றினை வைத்திருந்தார். இது 2010 ஆம் ஆண்டு ரூபா 10 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 2017.09.30 இல் இந்தக் காணியின் சந்தைப் பெறுமதி ரூபா 13 மில்லியன் ஆகும். அவர் 2019 மார்ச் இல் இந்தக் காணியை ரூபா 15 மில்லியனுக்கு விற்பனை செய்ததுடன் பின்வரும் செலவுகளையும் செய்திருந்தார்.

தரகர் கட்டணம் - ரூபா 750,000

விளம்பரம் - ரூபா 100,000

8) தொழில்தருநரால் கழிக்கப்பட்ட PAYE ரூபா 127,380 ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்காக **திரு. மெண்டிசினால்** செலுத்த வேண்டிய மீதி வரி / (மேலதிகமாகச் செலுத்தப்பட்ட வரி) இனையும் வருமான வரிப் பொறுப்பினையும் **மதிப்பிடுக.** (ஏதாவது வருமானம் வரிவிதிப்பற்றதாயின், அதனைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்)

***[25 புள்ளிகள்]***

## *பகுதி C இன் முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வைநிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக்கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | பகுப்பாய்வு செய்தல் (Analyze) | தீர்வினை அல்லது பேறினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | முடிவொன்றை அடையும் நோக்கில் விவாதம் மூலம் விபரமாகப் பரீட்சித்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காகப் ஆய்வு செய்தல் |
| | | சுருக்கமாகக் குறிப்பிடுக (Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | தொடர்பாடுக (Communicate) | தகவல்களைப் பங்கிடுதல் அல்லது பகிர்தல் |
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றுதலும் | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | | எடுத்துக்காட்டுடன் விபரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | தயாரிக்குக (Prepare) | கேட்கப்பட்ட விடயத்தை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடு அல்லது விளக்கங்கள் மூலம் தீர்வு காணல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | வரைபுத்தாளில் வரைக (Graph) | வரைபடங்கள் மூலம் காட்டுதல் |
| | | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile) | வேறொன்றுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தல் | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக (Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret) | விளங்கக்கூடிய வகையில் தெளிவுபடுத்துதல் |
| | | ஏற்பிசைவு செய்தல் (Recognize) | அறிவை அல்லது அது சார்ந்த அனுபவத்தைக் கொண்டு செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| அறிவு (1) | விடயங்களை ஞாபகப்படுத்தலும் அடிப்படை எண்ணக்கருக்களும் | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

**நான்கு [04] கட்டாய வினாக்கள்**

[மொத்தம் 20 புள்ளிகள்]

## பகுதி A

***வினா 01 இற்குப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:***

**அலகு 01 – இலங்கை வரியியலுக்கான அறிமுகம்**

கற்றற் பேறுகள் – வரியியலுடன் தொடர்புடைய வதிவிட விதியைப் பிரயோகித்தல்

பின்வரும் விடயங்கள் காணப்படின் கம்பனி வதிவுடையதாகும்:

- இலங்கைச் சட்டங்களின்கீழ் கூட்டிணைக்கப்பட்டதாக அல்லது உருவாக்கப்பட்டதாக இருத்தல்;
- பதிவுசெய்யப்பட்ட அல்லது தலைமை அலுவலகம் இலங்கையில் இருத்தல்; அல்லது
- ஆண்டின் காலப்பகுதியில் எந்த நேரத்திலும் கம்பனியின் முகாமை மற்றும் கட்டுப்பாட்டு அலுவல்கள் இலங்கையில் மேற்கொள்ளப்படல்.
- வரையறுக்கப்பட்ட குளோபல் டெக் ஸ்ரீ லங்கா (தனியார்) கம்பனி இலங்கை கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளது. எனவே இது ஒரு வதிவுள்ள கம்பனியாகும்.

***[05 புள்ளிகள்]***

***வினா 02 இற்குப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:***

**அலகு 03 – தனிநபர்கள் மற்றும் கம்பனிகளின் வரிவிதிப்பு**

கற்றற் பேறுகள் – பரிமாற்ற விலையிடலின் கீழ், கை நீள விலை மற்றும் தேவையான ஆவணங்கள் பற்றிய எண்ணக்கருவை விளக்குதல்

***(a)***

1 எந்தவொரு நபரும் அல்லது தொழில் முயற்சி நிறுவனமும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பங்குகளை வைத்திருப்பது அல்லது வேறுவகையில் ஏனைய தொழில் முயற்சி நிறுவனத்தில் பெரும்பாலான வாக்களிக்கின்ற சக்தியைக் கொண்டிருப்பது;

2 எந்தவொரு நபரும் அல்லது தொழில் முயற்சி நிறுவனமும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அத்தகைய ஒவ்வொரு தொழில் முயற்சி நிறுவனத்திலும் 50% இற்கும் குறையாத வாக்களிக்கும் சக்தியைக் கொண்டிருக்கின்ற பங்குகளை வைத்திருப்பது

3 இந்த ஒழுங்குவிதியின் வேறு ஏதாவது உருப்படியின் கீழ் இணைக்கப்பட்ட ஒரு தொழில் முயற்சி நிறுவனமாக கருதப்படாது வங்கி ஒன்றினால் வழங்கப்படாத, ஒரு தொழில் முயற்சி நிறுவனத்தினால் மற்றொரு தொழில் முயற்சி நிறுவனத்திற்கு வழங்கப்படும் கடன்கள், வழங்கப்பட்ட மற்றைய தொழில் முயற்சி நிறுவனத்தின் மொத்தச் சொத்துக்களின் ஏட்டுப் பெறுமதியில் 51% இனை விடக் குறையாததாக அமைந்திருத்தல் ;

4 இந்த ஒழுங்குவிதியின் வேறு ஏதாவது உருப்படியின் கீழ் இணைக்கப்பட்ட ஒரு தொழில் முயற்சி நிறுவனமாக கருதப்படாது வங்கி ஒன்றினால் வழங்கப்படாத, ஒரு தொழில் முயற்சி நிறுவனத்தினால் மற்றொரு தொழில் முயற்சி நிறுவனத்திற்கு வழங்கப்படும் கடன்கள் மற்றும் உரிமையாண்மை, வழங்கப்பட்ட மற்றைய தொழில் முயற்சி நிறுவனத்தின் மொத்தச் சொத்துக்களின் ஏட்டுப் பெறுமதியில் 51% இனை விடக் குறையாததாக அமைந்திருத்தல் ;

5 ஒரு தொழில் முயற்சி நிறுவனம் மற்றைய தொழில் முயற்சி நிறுவனத்தின் மொத்தப் படுகடன்களின் 25% இனை விட குறையாத அளவுக்கு உத்தரவாதம் வழங்குதல் ;

6 பணிப்பாளர் சபையின் அல்லது ஆளுகைச் சபையின் அங்கத்தவர்களின் அரைவாசிக்கு மேற்பட்டோர், அல்லது ஒரு தொழில் முயற்சி நிறுவனத்தின் ஆளுகைச் சபையின் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிறைவேற்றுத்தரப் பணிப்பாளர்கள் அல்லது நிறைவேற்றுத்தர அதிகாரிகள் மற்றைய தொழில் முயற்சி நிறுவனத்தினால் நியமிக்கப்படுதல்

7 பணிப்பாளர் சபையின் அல்லது ஆளுகைச் சபையின் அங்கத்தவர்களின் அரைவாசிக்கு மேற்பட்டோர், அல்லது இரு தொழில் முயற்சி நிறுவனத்தினதும் ஆளுகைச் சபையின் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிறைவேற்றுத்தரப் பணிப்பாளர்கள் அல்லது நிறைவேற்றுத்தர அதிகாரிகள் ஒரே நபரினால் அல்லது நபர்களால் நியமிக்கப்படுதல்

8 ஒரு தொழில் முயற்சி நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகின்ற பொருட்கள் அல்லது உருப்படிகளின் தயாரிப்பு அல்லது செயன்முறைப்படுத்தலுக்குத் தேவையான மூலப்பொருட்கள், அரைவாசி முடிந்த பொருட்கள் மற்றும் நுகர்வுப் பொருட்களின் அல்லது விற்பனைக்குத் தேவையான கொள்வனவுகளின் 90% அல்லது அதற்கு மேற்பட்ட வீதமானவை மற்றைய தொழில் முயற்சி நிறுவனத்தினால் அல்லது மற்றைய தொழில் முயற்சி நிறுவனங்களால் குறித்துரைக்கப்பட்ட நபரால் வழங்கல் செய்யப்படுதலும், வழங்கலுடன் தொடர்புடைய விலைகளும் ஏனைய நிபந்தனைகளும் அந்த மற்றைய தொழில் முயற்சி நிறுவனத்தின் செல்வாக்கிற்கு உட்படுதலும்;

9 ஒரு தொழில் முயற்சி நிறுவனத்தால் தயாரிக்கப்படுகின்ற அல்லது செயன்முறைப்படுத் தப்படுகின்ற பொருட்கள் அல்லது உருப்படிகள் தொழில் முயற்சி நிறுவனங்களால் குறித்துரைக்கப்படும் வேறு தொழில் முயற்சி நிறுவனத்திற்கு அல்லது நபர்களுக்கு மாற்றப்படுதலும் அதனுடன் தொடர்புடைய விலைகளும் ஏனைய நிபந்தனைகளும் அந்த தொழில் முயற்சி நிறுவனத்தின் செல்வாக்கிற்கு உட்படுதலும் அல்லது மறுதலையாகவும் ;

10 ஒரு தொழில் முயற்சி நிறுவனம் ஒரு தனிநபரால் அல்லது அத்தகைய தனிநபரினதும் அவரது உறவினரதும் கூட்டால் கட்டுப்படுத்தப்படுமிடத்தும் மற்றைய தொழில் முயற்சி நிறுவனம் அதே தனிநபரால் அல்லது அவரது உறவினரால் அல்லது அத்தகைய தனிநபரினதும் அவரது உறவினரதும் கூட்டால் கட்டுப்படுத்தப்படுமிடத்தும்;

11 ஒரு தொழில் முயற்சி நிறுவனம் என்பது ஒரு நிறுவனம், நபர்களின் கூட்டு அல்லது தனிநபர்களின் அமைப்பு, மற்றைய தொழில் முயற்சி நிறுவனம் அத்தகைய நிறுவனம், நபர்களின் கூட்டு அல்லது தனிநபர்களின் அமைப்பில் பத்து வீதத்தைவிடக் குறையாத அளவு ஈடுபாட்டைக் கொண்டிருத்தல், அல்லது

12 கட்டுப்படுத்தப்பட்ட பரிவர்த்தனையானது பரிவர்த்தனைகளிலிருந்து வேறுபடுகிறது, அது பிரிவு 76 அல்லது 77 இல் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி முகாமை, கட்டுப்பாடு அல்லது மூலதனத்தில் நேரடியாகப் பங்கேற்காத எந்தவொரு நபராலும் செய்யப்படக்கூடியது அல்லது விதிக்கப்படக்கூடியது, ஆயினும் தொழில் முயற்சி நிறுவனத்திற்கு சாத்தியமான நன்மையினை வழங்குகிறது.

***[ஏதாவது இரண்டு விடயங்களுக்கு 02 புள்ளிகள்]***

**(b)**

1 ஒப்பீடு செய்யத்தக்க கட்டுப்பாடற்ற விலை முறை
2 மீள்விற்பனை விலை முறை
3 கிரயக் கூட்டல் முறை (Cost Plus Method)
4 பரிமாற்ற நிகர எல்லை முறை (Transactional Net Margin Method)
5 இலாப பிரிப்பு முறை (Profit Split Method)

***[ஏதாவது இரண்டு விடயங்களுக்கு 02 புள்ளிகள்]***

**(c)**

1 உள்ளூர்க் கோப்பு (Local File)
2 பிரதான கோப்பு (Master File)
3 நாடுகள் வாரியான அறிக்கை (Country-by-Country Report)

***[ஏதாவது விடயத்திற்கு 01 புள்ளி]***

---

***வினா 03 இற்குப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:***

**அலகு 06 –** ***நிறுத்தி வைத்தல் வரி(WHT), மூலதன ஆதாய வரி மற்றும் தீர்ப்புவழிச் சட்டங்கள்***

கற்றற் பேறுகள் – ஏற்புடைய நிறுத்திவைத்தல் வருமான வரிகள் மற்றும் இறுதி வரிகளை மதிப்பிடுதல்

| கொடுப்பனவு | WHT இன் ஏற்புடையதன்மை | வீதம் | WHT |
|---|---|---|---|
| - அலுவலக வளாகங்களுக்கான வாடகைக் கொடுப்பனவு ரூபா 40,000 | ஆம் | 10% | 4,000 |
| - வியாபார இலாபங்களிலிருந்து செலுத்தப்பட்ட இடைக்காலப் பங்கிலாபம் ரூபா 1,200,000 | ஆம் | 14% | 168,000 |
| - கம்பனி வாகனங்களை பழுதுபார்த்த பொறியாளருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 100,000 | ஆம் | 5% | 5,000 |
| - வங்கியொன்றிடமிருந்து பெறப்பட்ட வாகனங்களின் நிதிக் குத்தகையொன்றிற்காகச் செலுத்தப்பட்ட வட்டி ரூபா 53,650. | இல்லை, இது நிதி நிறுவனமொன்றுக்குச் செலுத்தப்பட்டது | - | - |
| - தொழில் வழக்கொன்று தொடர்பில் வழங்கப்பட்ட சேவைக்காக வழக்கறிஞர் ஒருவருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 30,000 | இல்லை, ரூபா 50,000 ஐ விடக் குறைந்த தொகை | - | - |

***[05 புள்ளிகள்]***

***வினா 04 இற்குப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:***

| |
|---|
| **அலகு 07 – ஏனைய வியாபார வரிகள்** |
| கற்றற் பேறுகள் – பெறுமதிசேர் வரியின் (VAT) விதிப்பு, பதிவு, கணிப்பீடு மற்றும் பல்வேறு கடப்பாடுகள் ஆகியவற்றை விளக்குதல் |

**(a)** (1) பொருட்பட்டியல் (invoice) திகதி
(2) கொடுப்பனவுக்கான உரிய திகதி
(3) கொடுப்பனவு / முற்பணம் பெறும் திகதி
(4) விநியோகத் திகதி (பொருட்கள் விநியோகித்து 10 நாட்களுக்குள் பொருட்பட்டியல் விநியோகிக்கப்படாதவிடத்து)

இதில் எது முந்தியதோ அது வழங்கல் காலமாக இருக்கும்.

**(3 புள்ளிகள்)**

**(b)**
- இலங்கைச் பிரசையாக அல்லாத, இலங்கையில் வதியாத ஒருவர்.
- இலங்கை குடிவரவு கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் விநியோகிக்கப்பட்ட விசாவின் கீழ் 90 நாட்களையும்விட குறைவான நாட்கள் இலங்கையில் தங்கியிருந்த ஒருவர்.
- இலங்கையில் அவரது வருகையின் முதல் நாளன்று 18 வயதுக்குக் குறைவாக இருக்கக்கூடாது.

***[ஏதாவது 2 விடயங்களுக்கு 02 புள்ளிகள்]***

***வினா 05 இற்குப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:***

| |
|---|
| **அலகு 05 – கடப்பாடுகளும் நடைமுறைகளும்** |
| கற்றற் பேறுகள் – வருமான வரிக் கொடுப்பனவுகளின் சுய மதிப்பீட்டுத் திட்டம் மற்றும் உரிய திகதிகளை ஏற்பிசைவு செய்தல் |

(a) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிரிவு 90, 91, 92 இன்படி, வருமான வரி செலுத்துகின்ற ஒவ்வொரு நபரும் மதிப்பிடப்பட்ட வரியை நான்கு தவணைகளில் செலுத்துவதற்குத் தேவைப்படுத் தப்படுகின்றனர்.

2018/19 ஆம் வரிமதிப்பாண்டின் காலாண்டுத் தவணைக் கொடுப்பனவுகளுக் கான உரிய திகதிகள்
- 1 ஆவது காலாண்டு – 2018 ஆகஸ்ட் 15 அல்லது அதற்கு முன்
- 2 ஆவது காலாண்டு – 2018 நவெம்பர் 15 அல்லது அதற்கு முன்
- 3 ஆவது காலாண்டு – 2019 பெப்ரவரி 15 அல்லது அதற்கு முன்
- 4 ஆவது காலாண்டு – 2019 மே 15 அல்லது அதற்கு முன்
- இறுதிக் கொடுப்பனவு – 2019 செப்ரெம்பர் 30 அல்லது அதற்கு முன்

***[03 புள்ளிகள்]***

(b)

செலுத்த வேண்டிய வரி மதிப்பீடானது கீழே தரப்படும் இரண்டு வழிகளில் செய்யப்பட முடியும்.

i. நடப்பு வருட இலாபங்களின் அடிப்படையில் செலுத்த வேண்டிய வரியை மதிப்பிடுதல்

ii முன்னைய ஆண்டு வரிப் பொறுப்பினை 5% இனால் உயர்துவதன் அடிப்படையில் செலுத்த வேண்டிய வரியை மதிப்பிடுதல் (இது வரிமதிப்பாண்டு 2018/19 இற்கு மாத்திரமே ஏற்புடையதாக இருக்கும்.)

தவணைக் கொடுப்பனவு = <u>மதிப்பிடப்பட்ட செ.வே.வரி – [தவணைக் கொடுப். + WHT]</u>
மீதமுள்ள தவணைக் கொடுப். எண்ணிக்கை

***[04 புள்ளிகள்]***

(c)

1 பிரிவு 179(2) - செலுத்தவேண்டிய வரி உரிய திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால்
செலுத்த வேண்டிய வரித் தொகையின் 10% இற்குச் சமனான ஒரு தண்டம் விதிக்கப்பட முடியும்.

2 உரிய திகதியில் வரித் தொகைகொன்று செலுத்தப்படாதிருப்பின், வரி செலுத்துபவர் மாதாந்தம் கூட்டப்படுகின்ற 1.5% என்ற மாதாந்த அல்லது மாதத்தின் பகுதிக்கான வட்டியானது உரிய திகதியிலிருந்து வரி செலுத்தப்படும் திகதி வரையிலான காலப்பகுதிக்கு (கால நீடிப்பை கருத்திற்கொள்ளாது தீர்மானிக்கப்படும்) செலுத்தப்பட வேண்டிய பொறுப்பு இருக்கும்.

***[03 புள்ளிகள்]***

***[மொத்தம் 10 புள்ளிகள்]***

***வினா 06 இற்குப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:***

**அலகு 04 – நானாவித முயற்சிகளின் வரிவிதிப்பு**

கற்றற் பேறுகள் – பங்குடமை ஒன்றின் நிறுத்திவைத்தல் வரியைக் கணிப்பிடுதல்

– பங்காளர்களின் வரிப் பரிப்பினை மதிப்பிடுதல்

**(a) 2018/19 ஆம் வரிமதிப்பாண்டு**

| | | | |
|---|---|---|---|
| வரிக்கு முன்னரான இலாபம் | | 3,080,200 | |
| கழி: முதலீட்டு வருமானம் - வட்டி வருமானம் | | (219,700) | |
| -பங்கிலாபம் | | (64,500) | |
| கூட்டு: | | | |
| பங்காளர்கள் சம்பளம் | | 1,800,000 | |
| மூலதனம் மீதான வட்டி | | 111,000 | |
| **பங்குடமை வியாபார வருமானம்** | | 4,707,700 | |
| **பங்குடமை வியாபார வருமானம்** | | 4,707,700 | |
| வட்டி | 219,700 | | |
| பங்கிலாபம் - இறுதி WHT | - | | |
| **பங்குடமை முதலீட்டு வருமானம்** | | 219,700 | |
| மொத்த பங்குடமை வருமானம் | | 4,926,700 | ***[08 புள்ளிகள்]*** |

**(b)**

| | | |
|---|---|---|
| WHT இற்குப் பொறுப்புடைய பங்குடமை வருமானம் | 4,926,700 | |
| நிறுத்திவைத்தல் வரி @ 8% | 394,136 | ***[02 புள்ளிகள்]*** |

***வினா 07 இற்குப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:***

**அலகு 07 – ஏனைய வியாபார வரிகள்**

கற்றற் பேறுகள் – பெறுமதிசேர் வரியின் (VAT) விதிப்பு, பதிவு, கணிப்பீடு மற்றும் பல்வேறு கடப்பாடுகள் ஆகியவற்றை விளக்குதல்

**2019 செப்ரெம்பர் 30 இல் முடிவடைந்த காலாண்டிற்காகச் செலுத்த வேண்டிய VAT**

**வெளியீட்டு வரி**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வரிவிதிக்கத்தக்க வழங்கல்கள் | 6,510,000 | 15% | | 976,500 | |
| வரிவிலக்கு வழங்கல்கள் | 930,000 | வரிவிலக்கு | | - | |
| பூச்சியப் பெறுமதியிடப்பட்ட வழங்கல்கள் | 1,860,000 | 0% | | - | |
| | **9,300,000** | | | | **976,500** |

**உள்ளீட்டு வரி**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பொருட்களின் இறக்குமதி | | | | 245,000 | |
| உள்நாட்டுக் கொள்வனவுகள் | | | 184,000 | | |
| கார்களின் பழுதுபார்ப்புகள் மீது | | | (12,000) | | |
| | | | 172,000 | | |
| விலக்களிப்பு வழங்கல்களுக்கு சாட்டத்தக்கவை | | | (17,200) | | |
| | | | | 154,800 | |
| அனுமதிக்கத்தக்க உள்ளீட்டு வரி | | | | 399,800 | |
| முன்கொணரப்பட்ட உறிஞ்சப்படாத உள்ளீட்டு வரி | | | | 104,000 | |
| | | | | 503,800 | |
| பூச்சியப் பெறுமதியிடப்பட்ட வழங்கல்களுக்குச் சாட்டத்தக்க உள்ளீட்டு வரி | | | | 79,960 | |
| 100% வெளியீட்டு வரிக்கு மட்டுப்படுத்தப்பட்ட மீதி உள்ளீட்டு கோரிக்கை | | | 976,500 | 423,840 | |
| | | | | | 503,800 |
| செலுத்த வேண்டிய வரி | | | | | 472,700 |
| கழி: செய்யப்பட்ட தவணைக் கொடுப்பனவுகள் | | | | | (400,000) |
| **செலுத்த வேண்டிய மீதி** | | | | | **72,700** |

***[மொத்தம் 10 புள்ளிகள்]***

***வினா 08 இற்குப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:***

| |
|---|
| **அலகு 2, 3 & 5 – வருமான மூலங்கள்**<br>**– தனிநபர்கள் மற்றும் கம்பனிகளின் வரிவிதிப்பு**<br>***– நிறுத்தி வைத்தல் வரி (WHT), மூலதன ஆதாய வரி மற்றும் தீர்ப்புவழிச் சட்டங்கள்***<br><br>கற்றற் பேறுகள் – வருமான மூலங்களை மதிப்பிடல்<br>– தனிநபர்கள் மற்றும் கம்பனிகளின் மொத்த வருமான வரிப் பரிப்பை மதிப்பிடுதல் |

**இ இயுக்கோ (பிரைவேற்) லிமிட்டெட்**
**2018/19 ஆம் வரிமதிப்பாண்டு**

| | | | ரூபா |
|---|---|---|---|
| வியாபார வருமானம் | குறிப்பு : 1 | | 41,414,850 |
| முதலீட்டு வருமானம் | குறிப்பு : 2 | | 234,000 |
| **வரிமதிக்கத்தக்க வருமானம்** | | | **41,648,850** |
| <u>கழி: தகைமைக் கொடுப்பனவுகளும் நிவாரணங்களும்</u> | | | |
| பல்கலைக்கழகத்திற்கான நன்கொடை | | | (1,000,000) |
| நன்கொடை – கற்றல் உபகரணங்கள் - உரித்தற்றது | | | - |
| **வரிவிதி வருமானம்** | | | **40,648,850** |
| **வரிப் பரிப்பு**<br>**கல்விச் சேவைகள் வருமானம் > மொத்த வருமானத்தில் 80% என்பதால்** | | | |
| **வரி @ 14%** | | | **5,690,839** |
| <u>வரி வரவுகள்</u> | | | |
| பொருளாதார சேவைகள் கட்டணம் | | | (1,124,000) |
| வாடகை மீதான நிறுத்திவைத்தல் வரி | | | (30,000) |
| வட்டி மீதான நிறுத்திவைத்தல் வரி | | | (11,700) |
| செலுத்த வேண்டிய மீதி | | | 4,525,139 |

**குறிப்பு 1 : வியாபார வருமானக் கணிப்பீடு**

| | | | | |
|---|---|---|---|---|
| வரிக்கு முன்னரான இலாபம் | | | | 36,326,600 |
| கழி: முதலீட்டு வருமானம் | | | | |
| வாடகை வருமானம் | | வியாபாரத்தின் பகுதி | | - |
| பங்கிலாப வருமானம் | | | | (309,600) |
| வட்டி வருமானம் | | | | (222,300) |
| கழி: வரி விதிக்கப்படாத வருமானம் | | | | |
| கணினிகளின் விற்பனையிலிருந்தான இலாபம் | | | | (150,000) |
| கழி: கணினி விற்பனை மீதான சமப்படுத்தல் படி | | | | |
| | விற்பனை வருமானம் | | 425,000 | |
| | | | | (231,250) |
| | TWDV | | (656,250) | |
| கூட்டு: அனுமதிக்கப்படாத கழிப்பனவுகள் | | | | |
| தேய்மானம் | | | | 3,228,000 |
| பணிக்கொடை ஏற்பாடு | | | | 886,000 |
| ஆய்வுச் செலவு – வருமான ஈட்டத்திற்காகச் செலவிடப்படவில்லை | | | | 1,000,000 |
| வெளிநாட்டுப் பயணம் - அனுமதிக்கப்பட்டது | | | | - |
| பல்கலைக்கழகத்திற்கான நன்கொடை | | | | 1,000,000 |
| மாணவர்களுக்கான நன்கொடை | | | | 500,000 |
| சட்டக் கட்டணம் - அனுமதிக்கப்பட்டது | | | | - |
| புது வருட அன்பளிப்புகள் | | அனுமதிக்கப்படாதது | | 1,250,000 |
| பதிவழிப்புகள் | | அனுமதிக்கப்படாதது | | 600,000 |
| நிதிச் செலவு | | | 4,500,000 | |
| (பங்கு மூலதனம் + ஒதுக்கம்) x 4 | 60,000,000 | | | |
| அனுமதிக்கத்தக்க வட்டி | 4,500,000/75,000,000 x 60,000,000 | | 3,600,000 | |
| அனுமதிக்கப்படாத நிதிச் செலவு | | | | 900,000 |
| <u>கழி: மூலதனப் படிகள்</u> | | | | |
| காணி | 12,500,000 | 2017/18 | மூலதனப் படி இல்லை | |
| கட்டிடம் | 10,000,000 | 2017/18 | 10% | (1,000,000) |
| மோட்டார் வாகனங்கள் | 2,750,000 | 2017/18 | 20% | (550,000) |
| மோட்டார் வாகனங்கள் | 2,300,000 | 2018/19 | 5 ஆண்டுகள் | (460,000) |
| அலுவலக உபகரணம் | 987,000 | 2017/18 | 33 1/3 % | (329,000) |
| அலுவலக உபகரணம் | 140,000 | 2018/19 | 5 ஆண்டுகள் | (28,000) |
| கணினிகள் | 2000000 | 2017/18 | 25% | (500,000) |
| கணினிகள் | 1,235,000 | 2018/19 | 20% | (247,000) |
| தளபாடம் | 1,243,000 | 2017/18 | 20% | (248,600) |
| **வியாபார வருமானம்** | | | | 41,414,850 |

<u>**குறிப்பு : 2 – முதலீட்டு வருமானக் கணிப்பீடு**</u>

| | | |
|---|---|---|
| வட்டி வருமானம் | | 234,000 |
| பங்கிலாப வருமானம் | இறுதி வரி | - |
| **முதலீட்டு வருமானம்** | | 234,000 |

***[மொத்தம் 25 புள்ளிகள்]***

***வினா 09 இற்குப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:***

அலகு **2, 3 & 5 – வருமான மூலங்கள்**

**– தனிநபர்கள் மற்றும் கம்பனிகளின் வரிவிதிப்பு**

***– நிறுத்தி வைத்தல் வரி (WHT), மூலதன ஆதாய வரி மற்றும் தீர்ப்புவழிச் சட்டங்கள்***

கற்றற் பேறுகள் – வருமான மூலங்களை மதிப்பிடல்

– தனிநபர்கள் மற்றும் கம்பனிகளின் மொத்த வருமான வரிப் பரிப்பை மதிப்பிடுதல

- சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் தேறுகையிலிருந்தான ஆதாயம் அல்லது இழப்பு மீதான வரியை **மதிப்பிடுதல்**

<u>**திரு. மெண்டிஸ்**</u>

<u>**2018/19 ஆம் வரிமதிப்பாண்டு**</u>

<u>**வருமான வரிக் கணிப்பீடு**</u>

<u>**தொழில்**</u>

அரசாங்கத்திடமிருந்தான ஓய்வூதியம் - வரிவிலக்கு

<u>முதன்மைத் தொழில்</u>

| | | | |
|---|---|---|---|
| சம்பளம் | | 1,980,000 | |
| பயணப் படி | | 440,000 | |
| உபகாரக் கொடுப்பனவு | | 90,000 | |
| வதிவிடம் | சந்தைப் பெறுமதியைக் கண்டறிய முடியாது | 330,000 | |
| தொலைபேசிக் கட்டணம் | 50% | 21,500 | |
| **தொழில் வருமானம்** | | | **2,861,500** |

<u>**வியாபாரம்**</u>

| | | | | |
|---|---|---|---|---|
| நிகர இலாபம் | | | 241,000 | |
| கூட்டு : நன்கொடை | | | 100,000 | |
| இயந்திரக் கிரயம் | | | 20,000 | |
| கழி: மூலதனப் படி | 20,000 | 5 ஆண்டுகள் | (4,000) | |
| **வியாபார வருமானம்** | | | | **357,000** |

| | | |
|---|---|---|
| <u>**முதலீடு**</u> | | |
| <u>பங்கிலாப வருமானம்</u> | | |
| பங்கிலாபங்கள் - WHT இற்கு உட்பட்ட பட்டியலிடப்பட்ட கம்பனிகளிலிருந்து பெறப்பட்டது | இறுதி வரி | |
| <u>வட்டி வருமானம்</u> | | |
| சேமிப்புக் கணக்குமீது | 36,000 | |
| கடன்மீது | 50,000 | 86,000 |
| <u>வாடகை வருமானம்</u> | | |
| மொத்த வாடகை | 2,000,000 | |
| கழிவு : சோலைவரி | (250,000) | |
| வட்டி | (430,000) | |
| | | 1,320,000 |
| <u>முதலீட்டுச் சொத்துக்களின் தேறுகை</u> | | |
| மறுபயன் (Consideration) | 15,000,000 | |
| கழி : கருதப்பட்ட கிரயம் | (13,000,000) | |
| தரகர் கட்டணம் | (750,000) | |
| விளம்பரம் | (100,000) | 1,150,000 |
| **முதலீட்டு வருமானம்** | | **2,556,000** |
| **வரிமதிக்கத்தக்க வருமானம்** | | **5,774,500** |
| கழி: தகைமைக் கொடுப்பனவுகளும் நிவாரணங்களும் | | |
| தனிப்பட்ட படி | (500,000) | |
| தொழிலுக்கான படி | (700,000) | |
| மொத்த வாடகையில் 25% | (500,000) | |
| வட்டி வருமானம் மீதான படி – சிரேஷ்ட பிரஜை | (36,000) | |
| அங்கீகரிக்கப்பட்ட தரும நிறுவனத்திற்கான நன்கொடை 100,000 | | |
| கோரிக்கையிடத்தக்க தொகை | (75,000) | |
| | | (1,811,000) |
| **வரிவிதிக்கத்தக்க வருமானம்** | | **3,963,500** |

| வரிப் பரிப்பு மூலதன ஆதாயம் | | |
|---|---|---|
| 1,150,000 | 10% | 115,000 |
| 600,000 | 4% | 24,000 |
| 600,000 | 8% | 48,000 |
| 600,000 | 12% | 72,000 |
| 600,000 | 16% | 96,000 |
| 413,500 | 20% | 82,700 |
| | | 322,700 |
| கழி: வரி வரவுகள் | | |
| வாடகை மீதான WHT@ 10% | | (200,000) |
| PAYE | | (127,380) |
| **செலுத்த வேண்டிய மீதி/(மேலதிகமாகச் செலுத்தப்பட்டது)** | | **(4,680)** |

***[மொத்தம் 25 புள்ளிகள்]***